ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2176/2 - 2020 මැයි මස 18 වැනි සඳුදා - 2020.05.18

அதி விசேஷமானது

*2176/2 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/78* (xiv)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

20 (4) (ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20(4)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகிய நான், இலங்கை கட்புல மற்றும் அரங்கேற்றக்கலை பல்கலைக்கழகத்தின் அலுவல்களின் நிருவாகம் பாரதூரமான முறையில் சீர்குலைந்துள்ளதெனவும் சொல்லப்பட்ட பல்கலைக்கழகத்தின் அதிகாரிகள் வழமையான நிலைமைகளை மீள நிலைநாட்டுவதற்கு தவறியுள்ளார்கள் எனவும் திருப்திப்படுவதன்மேல் சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின், கட்டளைச் சட்டத்தின், நியதிச் சட்டத்தின், துணை விதிச்சட்டத்தின், ஒழுங்குவிதியின் அல்லது விதியின்கீழ் சொல்லப்பட்ட துணைவேந்தருக்கு அளிக்கப்பட்டுள்ள, அவர் மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது அவருக்கு குறித்தளிக்கப்பட்டுள்ள ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை பிரயோகிக்கும், புரியும் அல்லது நிறைவேற்றும் நோக்கத்துக்காக இலங்கை கட்புல மற்றும் அரங்கேற்றக்கலை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்குப் பதிலாக தகுதிவாய்ந்த அதிகாரியாக இருப்பதற்கு ஓய்வுபெற்ற பேராசிரியர் வீரக்கோன் முதியன்சேலாகே அபேரத்ன பண்டார அவர்களை 2020, மாச்சு 13 ஆந் திகதியிலிருந்து பயனுறும் வகையில் இக்கட்டளைமூலம் நியமிக்கின்றேன்.*

**கலாநிதி பந்துல குணவர்த்தன,**
*உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்.*

கொழும்பு,
*2020, மே 13.*

*5-25*

1A - PG 4982— 1019 (2020/05)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*ச. வ. பி. 21/78* (xiv)

## *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*20 (4) (ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20(4)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகிய நான், கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் அலுவல்களின் நிர்வாகம் பாரதூரமான முறையில் சீர்குலைந்துள்ளதெனவும் சொல்லப்பட்ட நிறுவகத்தின் அதிகாரிகள் வழமையான நிலைமைகளை மீள நிலைநாட்டுவதற்கு தவறியுள்ளார்கள் எனவும் திருப்திப்படுவதன்மேல் சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின், கட்டளைச் சட்டத்தின், நியதிச் சட்டத்தின், துணை விதிச்சட்டத்தின், ஒழுங்குவிதியின் அல்லது விதியின்கீழ் கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் பணிப்பாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அல்லது அவர் மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது அவருக்கு குறித்தளிக்கப்பட்டுள்ள ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கும், புரியும் அல்லது நிறைவேற்றும் நோக்கத்திற்காக கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் சொல்லப்பட்ட பணிப்பாளருக்குப் பதிலாக தகுதிவாய்ந்த அதிகாரியாக இருப்பதற்கு சிரேட்ட பேராசிரியர் ஜனித அபேவிக்ரம லியனகே அவர்களை 2020, மாச்சு 13 ஆந் திகதியிலிருந்து பயனுறும் வகையில் இக்கட்டளைமூலம் நியமிக்கின்றேன்.*

**கலாநிதி பந்துல குணவர்த்தன,**
*உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்.*

கொழும்பு,
*2020, மே 13.*

*5-26*